-6-

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 124 /2015

ஆணை எண்: 106 /2016

நாள்: 08/06/2016

கரூர் மாவட்டம் வெங்கமேடு கொங்குநகர்
குடியிருப்போர் நலச் சங்கம்,
கரூர் – 639 006. மனுதாரர்

டாக்டர். வை.சேரலாதன்,
தலைவர்,
கொங்குநகர் வளர்ச்சி சங்கம்,
கரூர். எதிர் மனுதாரர்

கரூர் நகராட்சி, வெங்கமேடு, கொங்கு நகர், 32, அண்ணாசாலையில், 55/2010 எண்ணிட்ட பதிவு எண்ணில் இயங்கி வரும் கரூர் மாவட்டம், வெங்கமேடு கொங்கு நகர் குடியிருப்போர் நலச் சங்கத் தலைவர் அவர்களின் 26.06.2015 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 124/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

கரூர் நகராட்சி, வெங்கமேடு கொங்கு நகர் பகுதியில் தற்பொழுது கரூர் நகராட்சியு ர் 12, 13 மற்றும் 14 வார்டு பகுதிகளில் (பழைய இனாம்கரூர் நகராட்சியில் 2,3 (மற்றும்) 4 வார்டுகள்) 129 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட மேற்படி வீட்டு மனைப்பிரிவில் 12.97 ஏக்கர் நிலங்கள் பொதுப்பயன்பாட்டிற்கெனவும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கோவை ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி வீட்டுமனைப் பிரிவுகள் விற்பனை செய்யப்பட்ட பின்பு, பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட மனைகளையும் திட்ட அனுமதி பெற்ற டாக்டர் சேரலாதன் ஆகியோர் விற்பனை செய்து விட்டதாக கரூர் மாவட்டம் வெங்கமேடு கொங்கு நகர் குடியிருப்போர் நலச் சங்கத் தலைவர் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்திருந்தார். மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக கரூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது.

2) கொங்கு நகரில் சுமார் 75 விழுக்காடு நிலப்பகுதிகள் வளர்ச்சி அடைந்தும் 25 விழுக்காடு நிலப்பகுதிகள் காலியிடமாக உள்ளது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அனுமதியற்ற மனைப்பிரிவாகக் கருதப்படும் இம்மனைப்பிரிவில் தென்மேற்குப் பகுதியில் சாலைகளின் அமைப்பும் மனைகளின் அமைப்பும் வேறுபடுகிறது என்றும் இப்பகுதி தொழில் நுட்ப ஒப்புதலுக்கு மாறாக வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் 17.03.2015 நாளிட்ட தீர்ப்பின்படி பொது ஒதுக்கீடு இடங்களை பொது ஒதுக்கீடு இடங்களாகப் பயன்படுத்த 2011 ஆம் ஆண்டு வரை இனாம்கரூர் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படாததால், கொங்கு நகர் நலச்சங்கம் பொது இடங்களை எடுக்கக்கோரி மீண்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.No.2895/2011 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார்.

3) இந்நிலையில் 04.04.2016 அன்று மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை ஒரு சிறப்பான தீர்ப்பினை வழங்கியுள்ளது. நகரமைப்பு இணை இயக்குநர்,கோட்டவருவாய் அதிகாரி மற்றும் நில அளவை உதவி இயக்குநர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு புல ஆய்வு மேற்கொண்டு நீதிமன்றம் கோரிய விவரங்களை அளிக்கப்பட வேண்டும் எனவும், இவ்வழக்கு மீண்டும் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே மனுதாரரின் முறையீடு தற்பொழுது நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது.

4) 2014ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப் பிரிவு 10 (3) (b) ல் குறிப்பிட்டுள்ளபடி, 1952 ஆம் ஆண்டு விசாரணைகளின் ஆணையச் சட்டத்தின்படி ஆணையிடப்பட்டிருக்கின்ற விசாரணை ஒன்றின் தொடர்பான பொருட்பாடு எதனையும் அல்லது நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, இந்நேர்வு சம்பந்தப்பட்ட வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் விசாரணையில் உள்ளது. எனவே மனுதாரரின் முறையீட்டு மனுவினை இம்முறை மன்ற நடுவம் விசாரிப்பது தற்போது சரியானதல்ல என இம்முறை மன்ற நடுவம் கருதுகிறது,

5) மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரரின் மனு மீதான நடவடிக்கையை, நிலுவையில் உள்ள வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கரூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. உயர்நீதிமன்றம் வழங்கும் இறுதி தீர்ப்புக்குப்பின், இந்நேர்வில் மேற்கொள்ளப்படும் முடிவான நடவடிக்கைக் குறித்து அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்திற்குச் சமர்ப்பிக்கும் படி ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்:

1. தலைவர்,
   கரூர் மாவட்டம் வெங்கமேடு
   கொங்குநகர் குடியிருப்போர் நலச்சங்கம்,
   32, அண்ணாசாலை, 2வது கிராஸ், கொங்கு நகர்,
   வெங்கமேடு, கரூர்–639 006

2. நகராட்சி ஆணையர்,
   கரூர் நகராட்சி, கரூர்– 639 006.

3. டாக்டர். வை.சேரலாதன்,
   தலைவர், கொங்குநகர் வளர்ச்சி சங்கம்,
   எண்.18, கோயம்புத்தூர் சாலை – வடக்கு, கரூர்.

நகல்:
மாவட்ட ஆட்சியர்,
கரூர் மாவட்டம், கரூர் – 639 006.